இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 09-11-2024

# அமெரிக்க அமைதியும் உலக அமைதியும்

அமெரிக்க மக்கள் தங்களுக்கான தலைவராக மீண்டும் டொனால்டு ட்ரம்ப்பை தேர்ந்தெடுத்துள்ளார்கள். மீண்டும் அமெரிக்க அதிபர் ஆகி இருக்கிறார் ட்ரம்ப். இரண்டாவது முறையாக அவர் அதிபர் ஆக பொறுப்பேற்கிறார். தன்மீதான இரண்டு வழக்குகளில் இருந்தும் தப்பி, இரண்டு கொலை முயற்சிச் செயல்களில் இருந்தும் தப்பித்து அதிபர் ஆகிவிட்டார்.

காதில் ரத்தம் வழிய அவர் பேசிய காட்சி, அவரை அதிபர் ஆக்கிவிட்டது. அந்தப் படம் அச்சிடப்பட்ட டி - சர்ட்டுகள் அதிகம் விற்றன. அதுவே வெற்றிக்குக் கட்டியம் கூறியது. ‘அமெரிக்காவைக் காக்க இவரே சரியானவர்’ என அடையாளம் காணப்பட்டார்.

அமெரிக்கத் தேர்தலில் ட்ரம்ப்தான் அதிக வயதில் அதிபராகத் தேர்வு ஆனவர். 78 வயது அவருக்கு. அமெரிக்க அதிபர் தேர்தலில் இருபது ஆண்டுகளுக்குப் பிறகு அதிகமான ‘பாப்புலர்’ வாக்குகளைப் பெற்று ட்ரம்ப் அதிபர் ஆகி இருக்கிறார்.

அமெரிக்க அதிபர் தேர்தல் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும். மாகாணங்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப உறுப்பினர்களைத் தேர்வு செய்வார்கள். சிறிய மாகாணம் என்றால் குறைவான உறுப்பினர்களும், பெரிய மாகாணம் என்றால் அதிகமான உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவார்கள். இதற்கு ‘எலக்டோரல் காலேஜ்’ என்று பெயர். அந்த வகையில் அமெரிக்கா முழுமைக்கும் 538 வாக்காளர் குழு உறுப்பினர்கள் உண்டு. இதில் பெரும்பான்மை பெறும் கட்சி, அதிபர் பதவியைக் கைப்பற்றும். இதுவரை ஜனநாயகக் கட்சியின் அதிபராக ஜோ பைடன் இருந்தார்.

நடைபெற்ற தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் கமலா ஹாரிஸும், குடியரசுக் கட்சி சார்பில் முன்னாள் அதிபர் ட்ரம்பும் போட்டியிட்டார்கள். தொடக்கத்தில் இருந்தே ட்ரம்ப் முன்னிலையில் இருந்தார். வெற்றியைத் தீர்மானிக்கும் மாகாணங்கள் என்று சொல்லப்பட்டவைகளில் ட்ரம்ப் முன்னிலை வகித்தார். எனவே, அவர்தான் அதிபர் ஆவார் என்று தொடக்கமே சொல்லி விட்டது.

தேர்தலுக்கு முன்னதாகவே ட்ரம்ப் வெற்றி பெறுவார் என்று சொல்லப்பட்டது. காரணம், மிகப்பெரிய அமெரிக்கத் தொழில் அதிபர்கள் அவருக்காக வெளிப்படையாகவே தேர்தல் பணியாற்றினார்கள். அதில் முக்கியமானவர் ‘ஸ்பேஸ் எக்ஸ்’ மற்றும் ‘டெஸ்லா’ நிறுவனர் எலான் மஸ்க். இவரது ஆதரவு, ட்ரம்புக்கு இளைஞர்கள் வாக்கை ஈர்த்தது. இவர் அதிகமான பணத்தைச் செலவு செய்ததாகவும் அமெரிக்கப் பத்திரிக்கைகள் எழுதுகின்றன.

கடந்த ஆண்டு குடியரசுக் கட்சியின் சார்பில் அதிபர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட விவேக் ராமசாமி, ட்ரம்புக்கு ஆதரவு தெரிவித்தார். அமெரிக்காவுக்கு குடியேறியவர்கள் வாக்குகளை ஈர்க்க விவேக் ராமசாமி பயன்பட்டார். அமெரிக்காவில் பிறந்து இந்துவாக மதம் மாறிய துளசி கப்பார்ட் என்பவர், நான்கு முறை அங்கு எம்.பி.யாக இருந்தவர். இவரும் ட்ரம்பை ஆதரித்தார். கமலா ஹாரீஸுக்கு எதிராக துளசி கப்பார்ட் பேச்சு பெரிதும் பயன்பட்டது. இப்படிப் பன்முகங்கள் ஆதரித்ததால்தான் ட்ரம்புக்கு இதுவரை இருந்த ‘நெகட்டிவ்’ இமேஜ் மாறியது.

அமெரிக்கத் தேர்தலில் ‘இந்தியா’ முக்கியப் பங்காற்றியது. ட்ரம்ப், இந்தியப் பிரதமர் மோடியின் ஆதரவு பெற்றவர் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ட்ரம்பை எதிர்த்துப் போட்டியிட்ட கமலா ஹாரீஸின் முன்னோர் இந்தியர்கள் என்பதும் அனைவரும் அறிந்ததே. அதனால் ஆந்திராவைப் பூர்வீகமாகக் கொண்ட உஷா சிலுக்குரி என்பவரின் கணவரான ஜே.டி.வான்ஸை துணை அதிபராக அறிவித்தார் ட்ரம்ப். இது அமெரிக்க இந்தியர்களை ஈர்க்கும் தந்திரம் ஆகும்.

அமெரிக்க மக்கள் பிரதிநிதிகளுக்கான சபைத் தேர்தலில் இந்திய வம்சாவளியினர் ஆறு பேர் வெற்றி பெற்றுள்ளார்கள். இவர்கள் ஆறு பேரும் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறார்கள். ட்ரம்ப் அதிபர் ஆவது, ‘கிரீன் கார்டு’ பெற விரும்பும் பத்து லட்சம் இந்தியர்களைப் பாதிக்கும் என்று சொல்லப்படுகிறது. ‘அமெரிக்கர்களுக்கு முன்னுரிமை தருவேன்’ என்று ட்ரம்ப் சொல்லி இருப்பது பலரையும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

‘அமெரிக்காவின் முதல் பெண் அதிபர் என்று ஆவார்’ என்று சொல்லப்பட்ட கமலா ஹாரீஸ் தோற்றுப் போனார். அமெரிக்க வரலாற்றில் இதுவரை ஒரு பெண்கூட அதிபர் ஆனது இல்லை. அதற்கான வாய்ப்பு 2016 ஆம் ஆண்டு ஹிலாரி கிளிண்டன் போட்டியிட்ட போது வந்தது. ஆனால் அவர் தோல்வி அடைந்தார். இப்போது கமலாவும் தோற்றுப் போனார். இனியொரு வாய்ப்பு எப்போது வருமோ எனத் தெரியாது.

அமெரிக்க நாட்டின் வரி உயர்வைக் கட்டுப்படுத்துவது, நாட்டின் குடியேற்றத்தைத் தடுப்பது, உலக நாடுகளின் பிரச்சினைகளும் போர்களும் ஆகியவை பற்றி ட்ரம்ப் அதிகம் பேசினார்.

“என் உயிர் உள்ளவரை உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்துக்காகவும் போராடுவேன். கடந்த நான்கு ஆண்டுகளாக நிலவிய பிரிவினையைப் பின்னுக்குத் தள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது” என்று சொல்லி இருக்கிறார் ட்ரம்ப். அவர் சிந்தனையில் ‘பிரிவினை’ என்று எதைச் சொல்கிறார் என்று தெரியவில்லை. உள்ளூர் பிரச்சினையையும், உலகப் பிரச்சினையையும் ட்ரம்ப் எப்படிக் கையாள்வார் என்பதில்தான் இருக்கிறது அமெரிக்க அமைதியும், உலக அமைதியும்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (8.11.2024) தலைமைச் செயலகத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் சந்தித்து, 2023–24ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட் நிறுவனத்தின் (TANMAG) தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத் தொகையான 5 கோடியே 72 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய்க்கான வங்கி வரைவோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இயற்கை வளங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க. பணீந்திர ரெட்டி, தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சரவணவேல்ராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக

## உதவிப் பொறியாளர் பணிக்குத் தெரிவு செய்யப்பட்ட 246 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, நவ.9-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.11.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒருங்கிணைந்த பொறியியல் பணிகள் தேர்வு (Combined Engineering Service Examination) வாயிலாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஆகிய துறைகளில் உதவிப் பொறியாளர் பணியிடத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட 246 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 20 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

அதன் விபரம் வருமாறு:-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒருங்கிணைந்த பொறியியல் பணிகள் தேர்வு வாயிலாக பல்வேறு துறைகளில் உதவிப் பொறியாளர் பணியிடத்திற்கான தேர்விற்கு 13.10.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு, தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, தேர்வுகள் நடத்தப்பட்டது.

அதன்படி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் 96 நபர்களும், பொதுப்பணித் துறையில் 42 நபர்களும், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறையில் 52 நபர்களும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையில் 18 நபர்களும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் 38 நபர்களும் என மொத்தம் 246 நபர்கள் உதவிப் பொறியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 20 நபர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று பணி நியமன ஆணைகளை வழங்கி, வாழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே. என். நேரு, வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பீலா வெங்கடேசன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கே. நந்தகுமார், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் மரு. ஆர். செல்வராஜ், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வ. தட்சிணாமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மழைக்காலம் மற்றும் கோடை காலத்தில் –

## தமிழ்நாடு முழுவதும் சீரான மின்சாரம் வழங்க நடவடிக்கை!

### அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்களுடன் – அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ஆய்வு!

*சென்னை, நவ. 9 -*

*மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி நேற்று (08.11.2024) சென்னை, தமிழ்நாடு மின்சார வாரிய தலைமையகத்தில் பருவ மழைக்காலம் மற்றும் எதிர் வரும் கோடை காலத்தில் தமிழ்நாடு முழுவதும் சீரான மின் விநியோகம் வழங்குவதற்கு தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் சார்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அனைத்து மண்டல தலைமை பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களுடன் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, தமிழ்நாடு முழுவதும் 6,68,225 ஒருங்கிணைந்த சிறப்பு பராமரிப்பு பணிகள் திட்டமிடப்பட்டு, கடந்த 01.07.2024 முதல் 15.10.2024 வரை மொத்தமாக 13,73,051 சிறப்பு பராமரிப்பு பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அதிலும், குறிப்பாக, 47,380 மின்கம்பங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன, சாய்ந்த நிலையில் இருந்த 33,494 மின் கம்பங்கள் சரிசெய்யப்பட்டிருக்கின்றன, புதியதாக 27,329 மின் கம்பங்கள் இடைசெருகல் செய்யப்பட்டிருக்கின்றன, 2,17,775 இடங்களில் பலவீனமான இன்சுலேட்டர்கள் மாற்றப்பட்டிருக்கின்றன, 41,508 இடங்களில் மின்கம்பதாங்கு கம்பிகள் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன, பழுதடைந்த 7,118 இடங்களில் பில்லர் பாக்ஸ்கள் சரிசெய்யப்பட்டுள்ளன, இதுதவிர்த்து சுமார் 2,927 கி.மீ. பழைய மின்கம்பிகள் புதியதாக மாற்றப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 13,73,051 சிறப்பு பராமரிப்பு பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

*மின் பகிர்மான வட்டம் வாரியாக விரிவான ஆய்வினை மேற்கொண்ட மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் வட்ட அளவில் அதிக அளவு மின் தடைகள், மின்மாற்றிகள் பழுது மற்றும் புகார்கள் கொண்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் தமது பணிகளில் தனிக்கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தினார்.*

*சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள புறநகர் பகுதிகளில் இருக்கக்கூடிய துணை மின் நிலையங்கள், மின்மாற்றிகள் மற்றும் பில்லர் பெட்டிகள் ஆகியவற்றில் உரிய முறையில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு தனிக்கவனம் செலுத்தி மின்நுகர்வோரிடமிருந்து வரும் புகார்களை குறைப்பதற்கு தக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.*

*இந்த ஆய்வின் போது, 30 நிமிடங்களுக்கு மேல் மின் தடங்கல் ஏற்பட்ட நிகழ்வுகள் குறித்தும் அதற்கான காரணத்தை அந்தந்த அலுவலர்களிடம் கேட்டறிந்து, தொடர்ச்சியாக மின் தடங்கல் ஏற்படும் இடங்களில் சிறப்பு கவனம் செலுத்தி அதற்கான காரணத்தை கண்டறிந்து உடனுக்குடன் சரி செய்யுமாறும், பொதுமக்களிடமிருந்து சமூக வலைதளங்கள் வாயிலாக பெறப்படும் புகார்கள் குறித்தும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும், தடையில்லா, சீரான மின்சாரம் தொடர்ந்து கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி அறிவுறுத்தினார்.*

*இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க. நந்தகுமார், இணை மேலாண்மை இயக்குநர்(நிதி) விஷு மஹாஜன், இயக்குநர்(பகிர்மானம்) ஏ.ஆர்.மஸ்கர்னஸ் உள்ளிட்ட அனைத்து இயக்குநர்கள், மண்டல தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.*

*மின் சேவைகள் மற்றும் மின் தடை குறித்த புகார்களுக்கு 24 மணி நேரமும் செயல்படும் மின்னகத்தை 94987 94987 தொடர்பு கொள்ளுமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.*


